IN THE COURT OF III ADDITIONAL DISTRICT COURT,
TIRUVALLUR AT POONAMALLEE

**O.S.473/2019**

Deposition of witness for the Plaintiff/PW1

Name :R.Sridhar Date: 08 .02.2023

Father's/Husband's Name: Ramachandran

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது வாதுரையில் ஏ.ஆர்.வைத்தியநாதன் அசல் வழக்கு எண்.854/1960 சென்னை நகர உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாக கூறினேன் என்றால் சரிதான். அந்த வழக்கின் பிரதிவாதிகள் வைத்தியநாதனின் பெற்றோர்கள் மற்றும் உடன் பிறந்தவர்கள். அந்த வழக்கில் வைத்தியநாதனுக்கு எவ்வளவு பங்கு தீர்பானது என்பது குறித்து எனக்கு சரிவர தெரியாது. ஆனால் அவருக்கு பாகம் ஒதுக்கப்பட்ட சொத்தை நான் வாங்கினேன். அந்த வழக்கின் பிரதிவாதிகளுக்கு எவ்வளவு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அந்த வழக்கின் இறுதி நிலை தீர்ப்பாணையின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம். அந்த இறுதி நிலை தீாப்பாணையை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அந்த இறுதி நிலை தீர்ப்பாணையின் விவரங்களை நான் படித்து பார்த்தேன். தற்போது ஞாபகமில்லை. அந்த தீர்ப்பாணையுடன் வரைபடம் இணைக்கப்பட்டுள்ளதா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் வாங்கிய சொத்தின் நான்கு எல்லைகளின் விவரம் அந்த இறுதி நிலை தீர்ப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு நினைவில்லை. அந்த வழக்கில் எல்லைகள் வகுக்கப்பட்டு அதன் தரப்பினர்களுக்கு குறிப்பிட்ட எல்லைகளுக்கு உட்பட்ட விஸ்தீரணம் கொண்ட சொத்து ஒதுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு இன்றுவரை உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்றால் தவறு. புல எண்.163/2ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் எனக்கு நினைவில்லை. அந்த புல எண்ணில் அமைந்துள்ள சொத்தின் விஸ்தீரணம் 3 ஏக்கர் 57 சென்ட் என்றால் இருக்கலாம். அந்த வழக்கில் வைத்தியநாதனுக்கு ஒதுக்கப்பட்ட அளவு நான் வாங்கிய

விஸ்தீரணம் புல எண்.163/2 பகுதியில் 17.37 சென்ட்டுகள். வைத்தியநாதனிடமிருந்து 1984ல் மஹாவீா் பாப்னா என்பவா் கிரையம் வாங்கினாா். மஹாவீா் பாப்னா வாங்கம் போது அந்த சொத்தின் புல எண் என்னவென்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பத்திரத்தை பாா்த்தால் தான் சொல்ல இயலும். மஹாவீா் பாப்னா அந்த சொத்தை வாங்கும் போது அந்த சொத்திற்குரிய பட்டா யாா் பெயரில் இருந்தது என்பது எனக்கு தெரியாது. ஆவணத்தை பாா்த்தால் தான் சொல்ல இயலும். நான் தாவா சொத்தை மஹாவீா் பாப்னாவிடமிருந்து அவரது பவா் ஏஜென்ட் ஆன உத்தம் சந்த் மூலம் 2006ல் வாங்கினேன். சொத்தை நான் வாங்கும் போது வில்லங்க சான்றிதழ் வாங்கி பாா்த்தேன். அந்த வில்லங்க சான்றிதழை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா ள்ன்றால் நினைவில்லை. தாவா சொத்தை நான் வாங்குவதற்கு முன்னதாக வழக்கறிஞரிடமிருந்து கருத்துரை பெற்றேனா என்றால் பெற்றேன். அந்த கருத்துரையை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியாக நினைவில்லை. தாவா சொத்திற்கான பட்டா மஹாவீா் பாப்னாவின் பெயரில் இருந்ததா என்றால் எனக்கு கவனமில்லை. எனது பெயரில் உள்ள பத்திரத்தில் பட்டா விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டிருக்கும். தாவா இடத்தை வாங்குவதற்கு சுமாா் இரண்டு மாதத்திற்கு முன்னதாக நான் அதை போய் பாா்த்தேன். தாவா சொத்து காலியாக இருந்தது. அசல் வழக்கு எண்.854/1960ன் தாவா சொத்தில் 1/3 பாகம் வைத்தியநாதனுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக பி.த.சா.1ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கின் 3வது, 5 முதல் 10 பிரதிவாதிகளுக்கு மொத்தமாக 17/27 பாகம் ஒதுக்கப்பட்டுள்ளதாக பி.த.சா.2ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.த.சா.2வில் சொத்துகளை பிரித்து விஸ்தீரணம் மற்றும் எல்லைகளை குறிப்பிட்டு ஒதுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

( பிரதிவாதியின் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடா்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது )